கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி

முன்னிலை:– திரு.எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16 ஆம் நாள் புதன்கிழமை

**<u>இடைநிலை மனு எண்.16/2024</u>**
அதன்
**<u>அசல் வழக்கு எண்.213/2021</u>**
<u>( CNR No.TNTS-01 000653 2021 )</u>

1. சுப்பாலட்சுமி
2. வேல்ராஜ்
3. சீனிவாசன்
4. சீதாலட்சுமி
5. ரவி
6. வெங்கடேஷ் . . . மனுதாரர்கள்/ 10 முதல் 15 பிரதிவாதிகள்

..எதிர்..

1. பண்டாரசாமி
2. ராம்மோகன்
3. செல்வராஜ் . . . 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்
4. சீனிவாசன், த/பெ கிருஷ்ணசாமி நாயக்கர்
5. மகாலட்சுமி
6. பத்மாவதி
7. ரஜினி
8. அச்சம்மாள்
9. கிருஷ்ணவேணி
10. ராஜேஸ்குமார்
11. துளசியம்மாள்
12. சீனியம்மாள்
13. செல்லத்தாய்
14. வாசுகி
15. கண்ணன்
16. பழனிச்சாமி
17. சீனிவாசகம் என்ற சீனி
18. ராமசுப்பு நாயக்கர்
19. சகுந்தலாதேவி
20. அபிநயா

21. மணிஷ் ஆதித்யா
22. ஜானகிராமன்
23. வேல்முருகன், த/பெ ராமசுப்பு நாயக்கர்
24. ராமதிலகம்
25. சுப்பம்மாள்
26. பால்சாமி
27. மாரியப்பன்
28. முருகன்
29. கருப்பசாமி
30. ராசு
31. ஜெகநாதன்
32. கணேசன், த/பெ ராமையா
33. செல்லப்பா
34. பழனி
35. கோட்டைசாமி
36. வேல்முருகன், த/பெ கிருஷ்ணசாமி
37. அன்னராஜ்
38. தங்கராஜ்
39. ராமசுப்பு நாயக்கர்
40. ராஜ்
41. ஜெயலட்சுமி
42. ராக்கப்பன்
43. மாயாண்டி
44. மாடசாமி, த/பெ சின்ன மாரியப்பன்
45. ராமசாமி
46. சீனிவாசன், த/பெ கிருஷ்ணசாமி
47. ஜெகவீரபாண்டியன்
48. பொன்னுச்சாமி, த/பெ முத்து  தேவர்
49. வைரமுத்து
50. வெங்கடேசன்
51. ஜெபமணி
52. சத்தியவான்
53. நல்லசாமி
54. செல்வன்
55. செல்வமணி
56. வெள்ளைபாண்டியன்
57. கணேசன்
58. மாடசாமி, த/பெ நிறைகுளத்தான்
59. தங்கராஜ்
60. இசக்கியம்மாள்
61. காளிசாமி
62. அந்தோணிசாமி

63. ராமமூர்த்தி
64. நாராயணசாமி
65. லட்சுமி நாராயணன்
66. தாமஸ்
67. சுப்பிரமணியன்
68. பொன்னுச்சாமி, த/பெ சாமுவேல்
69. செல்வி
70. சங்கலிபாண்டி
71. கணபதிராமன்
72. மேலாளர், ஐ.சி.ஐ.சி.வங்கி, தென்காசி
73. மேலாளர், கனரா வங்கி, சங்கரன்கோவில்
74. மேலாளர், எல்.ஐ.சி. வீட்டு வசதி நிதி நிறுவனம், திருநெல்வேலி
75. மேலாளர், ஹெச்.டி.பி.நிதி நிறுவனம்,
76. மேலாளர், ஆதார் ஹவுசிங் நிதி நிறுவனம்
77. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், சங்கரன்கோவில்
78. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கரிவலம்வந்தநல்லூர்
79. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மேலநீலிதநல்லூர்
80. மாவட்ட பதிவாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், தென்காசி
81. மாவட்ட ஆட்சியர், தென்காசி மாவட்டம்
82. வருவாய் கோட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தென்காசி
84. தாசில்தார், திருவேங்கடம் தாலுகா அலுவலகம், திருவேங்கடம்.

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனுவானது கடந்த 30.06.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர திரு.இ. அப்பாத்துரை அவர்களும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.பார்த்தசாரதி அவர்களும், 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.புஸ்பராஜ் அவர்களும், 8 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சுந்தரேசன் அவர்களும், 13 முதல் 18 மற்றும் 22 முதல் 25 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி எம்.கயல்விழி அவர்களும், 77 முதல் 84 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.ஜே.எம்.இருதயராஜ் அவர்களும் முன்னிலையாகியுள்ள நிலையில், 32, 44, 48, 57, 59 மற்றும் 64 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையிலும், 19 முதல் 21, 26 முதல் 31, 33 முதல் 43, 45 முதல் 47, 49 முதல் 56, 58, 60 முதல் 63 மற்றும் 65 முதல் 76 எதிர்மனுதாரர்கள் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், ஆவணங்களைப்

பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

<u>உத்தரவு</u>

இந்த மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 18 மற்றும் பிரிவு 151–ன் கீழ், அசல் வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்துகொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u>**:–

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் 10 முதல் 15 பிரதிவாதிகள் ஆவார்கள். அசல் வழக்கானது தபசில் சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இந்த நிர் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிர்வழக்குரையில் திருவேங்கடம் தாலுகா, அழகாபுரி கிராமத்தில் உள்ள சர்வே எண்.65/1A1, 65/1A2, 65/1A4 –ல் உள்ள 14.16 ஏக்கர் நிலம், சர்வே எண்.65/1A3A, 65/1A3B–ல் உள்ள 0.44 ஏக்கர்ஸ் நிலம், மற்றும் சர்வே எண்.65/1B–ல் உள்ள 10 ஏக்கர்ஸ் நிலம் ஆகியவை பிராதில் சொத்து விவரத்தில் சேர்க்கப்படவில்லை என்று குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்கள் இந்து கூட்டுக் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் அவையும் பிரிவினைக்கு உட்படுத்தப்பட வேண்டிய சொத்துக்கள் ஆகும். எனவே மேற்படி சொத்துக்களை தபசில் விவரத்தில் சேர்ப்பதற்கு ஏதுவாக பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>4 முதல் 7 எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**:–

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. பிராது தபசிலில் புதிதாக சேர்க்கக் கோரி மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் எப்போது யார் பெயருக்கு கிரையம் பெறப்பட்டது என்று குறிப்பிடவில்லை. மேற்படி சொத்துக்கள் இந்து கூட்டுக் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள் அதற்கான ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை. மேலும், மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் குறித்து முத்தையாக்கோனார் என்பவர் தென்காசி சார்பு நீதிமன்றத்தில் செல்லராணி மற்றும் 9 நபர்களின் மீது ஏற்றதை

ஆற்றுதல் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து அது அசல் வழக்கு எண்.298/1979 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு உரிய விசாரணைக்குப் பின்னர் மேற்சொன்ன முத்தையாக்கோனார் கோரியபடி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணையின்பேரில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கும், 2 வது மேல்முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து முத்தையாக்கோனாரின் வாரிசுகள் நிறைவேறுதல் மனு தாக்கல் செய்து, அதில் பிறந்த உத்தரவின்படி சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தின் மூலம் 14.03.2022 ஆம் தேதியன்று மனுதாரர்கள் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள பொதுக் குடும்பச் சொத்துக்கள் என்ற சொத்துக்களைப் பொறுத்து கிரைய ஆவணமானது ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது 10.08.2021 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்களால் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் பொதுக் குடும்பம் அல்லாது பிற நபர்களுக்கு வழக்கு தாக்கல் செய்த பின்னர் பாத்தியப்பட்டுள்ள நிலையில் தபசில் விவரத்தில் இந்த சொத்துக்கள் இணைக்கப்பட இயலாது. மேலும், மேற்படி முத்தையாக்கோனாரின் வாரீசுகள் இந்த நிர் 4 வது எதிர்மனுதாரருக்கு மேற்படி சொத்துக்களைப் பொறுத்து பொது அதிகார ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ள நிலையில், 4 வது எதிர்மனுதாரர் மேற்படி முத்தையாக்கோனாரின் வாரீசுகளான குருசெல்வி, பழனிச்சாமி, ராஜகுரு என்ற நாகலட்சுமி ஆகியோர்களுக்காக மேற்படியார்களின் அதிகார முகவர் என்ற நிலையில் மேற்படி சொத்துக்களில் சிலவற்றை 7 வது எதிர்மனுதாரருக்கு 01.04.2022 ஆம் தேதியன்று கிரையம் செய்து கொடுத்துள்ளார். மீதி சொத்துக்களை 4 வது எதிர்மனுதாரர் அவரது குமாரரான குருபிரசாத் என்பவருக்கு 19.03.2022 ஆம் தேதிய ஆவணத்தின் மூலம் கிரையம் கொடுத்துள்ளார். எனவே குடும்பத்திற்கு பாத்தியமில்லாத சொத்துக்களை மனுதாரர்கள் தபசிலில் சேர்க்கக் கோருவது ஏற்கக் கூடியதல்ல. எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால்

"இம்மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

5. இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **<u>பிரச்சனைக்கான தீர்வு</u>**:–

இந்த மனுவின் மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் 10 முதல் 15 பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கானது தபசில் சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இந்த நிர் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கில் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி எதிர்வழக்குரையில் திருவேங்கடம் தாலுகா, அழகாபுரி கிராமத்தில் உள்ள சர்வே எண்.65/1A1, 65/1A2, 65/1A4 –ல் உள்ள 14.16 ஏக்கர் நிலம், சர்வே எண்.65/1A3A, 65/1A3B–ல் உள்ள 0.44 ஏக்கர்ஸ் நிலம், மற்றும் சர்வே எண்.65/1B–ல் உள்ள 10 ஏக்கர்ஸ் நிலம் ஆகியவை பிராதில் சொத்து விவரத்தில் சேர்க்கப்படவில்லை என்று குறிப்பிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி சொத்துக்கள் இந்து கூட்டுக் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதால் அவையும் பிரிவினைக்கு உட்படுத்தப்பட வேண்டிய சொத்துக்கள் என்றும், எனவே மேற்படி சொத்துக்களை தபசில் விவரத்தில் சேர்ப்பதற்கு ஏதுவாக பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் வாதிட்டிருக்கிறார்.

7. 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் பிராது தபசிலில் புதிதாக சேர்க்கக் கோரி மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் எப்போது யார் பெயருக்கு கிரையம் பெறப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றும், மேற்படி சொத்துக்கள் இந்து கூட்டுக் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிட்டுள்ள மனுதாரர்கள் அதற்கான ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றும், மேலும், மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் குறித்து முத்தையாக்கோனார் என்பவர் தென்காசி சார்பு நீதிமன்றத்தில் செல்லராணி மற்றும் 9 நபர்களின் மீது ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து அது அசல் வழக்கு எண்.298/1979 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு உரிய விசாரணைக்குப் பின்னர் மேற்சொன்ன முத்தையாக்கோனார் கோரியபடி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி தீர்ப்பாணையின்பேரில் தாக்கல் செய்யப்பட்ட

மேல்முறையீட்டு வழக்கும், 2 வது மேல்முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், அதனைத் தொடர்ந்து முத்தையாக்கோனாரின் வாரிசுகள் நிறைவேறுதல் மனு தாக்கல் செய்து, அதில் பிறந்த உத்தரவின்படி சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தின் மூலம் 14.03.2022 ஆம் தேதியன்று மனுதாரர்கள் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள பொதுக் குடும்பச் சொத்துக்கள் என்ற சொத்துக்களைப் பொறுத்து கிரைய ஆவணமானது ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த அசல் வழக்கானது 10.08.2021 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்களால் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் பொதுக் குடும்பம் அல்லாது பிற நபர்களுக்கு வழக்கு தாக்கல் செய்த பின்னர் பாத்தியப்பட்டுள்ள நிலையில் தபசில் விவரத்தில் இந்த சொத்துக்கள் இணைக்கப்பட இயலாது என்றும், மேலும், மேற்படி முத்தையாக்கோனாரின் வாரீசுகள் இந்த நிர் 4 வது எதிர்மனுதாரருக்கு மேற்படி சொத்துக்களைப் பொறுத்து பொது அதிகார ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ள நிலையில், 4 வது எதிர்மனுதாரர் மேற்படி முத்தையாக்கோனாரின் வாரீசுகளான குருசெல்வி, பழனிச்சாமி, ராஜகுரு என்ற நாகலட்சுமி ஆகியோர்களுக்காக மேற்படியார்களின் அதிகார முகவர் என்ற நிலையில் மேற்படி சொத்துக்களில் சிலவற்றை 7 வது எதிர்மனுதாரருக்கு 01.04.2022 ஆம் தேதியன்று கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், மீதி சொத்துக்களை 4 வது எதிர்மனுதாரர் அவரது குமாரரான குருபிரசாத் என்பவருக்கு 19.03.2022 ஆம் தேதிய ஆவணத்தின் மூலம் கிரையம் கொடுத்துள்ளதாகவும், எனவே குடும்பத்திற்கு பாத்தியமில்லாத சொத்துக்களை மனுதாரர்கள் தபசிலில் சேர்க்கக் கோருவது ஏற்கக் கூடியதல்ல என்றும் வாதிடப்பட்டுள்ளது.

8. இரு தரப்பு வாதங்களும், வழக்காவணங்களும் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இந்த நிர் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இந்த மனுதாரர்கள் 10 முதல் 15 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் இந்த மனுதாரர்கள் தரப்பில் தரப்பார்களின் கூட்டுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களான திருவேங்கடம் தாலுகா, அழகாபுரி கிராமத்தில் உள்ள சர்வே எண்.65/1A1, 65/1A2, 65/1A4 –ல் உள்ள 14.16 ஏக்கர் நிலம், சர்வே எண்.65/1A3A, 65/1A3B–ல் உள்ள 0.44

ஏக்கர்ஸ் நிலம், மற்றும் சர்வே எண்.65/1B–ல் உள்ள 10 ஏக்கர்ஸ் நிலம் ஆகியவை பிராதில் சொத்து விவரத்தில் சேர்க்கப்படவில்லை என்றும், மேற்படி சொத்துக்களும் பாகப்பிரிவினைக்கு உட்பட்ட சொத்துக்கள் என்பதால் அவற்றை பிராது தபசில் சொத்து விவரத்தில் சேர்க்க வேண்டி பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று பிரதான கோரிக்கையானது மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் மேற்படி சொத்துக்களைப் பொறுத்து முத்தையாக்கோனார் என்பவர் தென்காசி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.298/1979 என தாக்கல் செய்து, மேற்படி வழக்கானது உரிய விசாரணைக்குப் பின்னர் மேற்சொன்ன முத்தையாக்கோனார் கோரியபடி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, மேற்படி தீர்ப்பாணையின்பேரில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கும், 2 வது மேல்முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், அதனைத் தொடர்ந்து முத்தையாக்கோனாரின் வாரிசுகள் நிறைவேறுதல் மனு தாக்கல் செய்து, அதில் பிறந்த உத்தரவின்படி சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தின் மூலம் 14.03.2022 ஆம் தேதியன்று மனுதாரர்கள் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள பொதுக் குடும்பச் சொத்துக்கள் என்ற சொத்துக்களைப் பொறுத்து கிரைய ஆவணமானது ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், எனவே குடும்பத்திற்கு பாத்தியமில்லாத சொத்துக்களை மனுதாரர்கள் தபசிலில் சேர்க்கக் கோருவது ஏற்கக் கூடியதல்ல என்றும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்களின் மேற்படி கூற்றுக்கு ஆதரவாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் 14.03.2022 ஆம் தேதியன்று சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தின் மூலம் அசல் வழக்கு எண்.298/1979–ன் வாதியான முத்தையாக்கோனாரின் வாரீசுகளான தாயம்மாள், குருசெல்வி, பழனிச்சாமி மற்றும் ராஜகுரு என்ற நாகலட்சுமி ஆகியோர்கள் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் எ.ம.சா.ஆ.1 ஆகவும், தாயம்மாள், குருசெல்வி, பழனிச்சாமி மற்றும் ராஜகுரு என்ற நாகலட்சுமி ஆகியோர்களின் பொது அதிகார முகவர் என்ற நிலையிலிருந்து 4 வது எதிர்மனுதாரர் அவரது மனைவியான 7 வது எதிர்மனுதாரருக்கு பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் எ.ம.சா.ஆ.2 ஆகவும், தாயம்மாள், குருசெல்வி, பழனிச்சாமி மற்றும் ராஜகுரு என்ற நாகலட்சுமி ஆகியோர்களின் பொது அதிகார முகவர் என்ற நிலையிலிருந்து 4 வது எதிர்மனுதாரர் அவரது குமாரரான குருபிரசாத்

என்பவருக்கு 19.03.2022 ஆம் தேதியன்று பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரைய ஆவணங்களின் சார்பதிவாளர் அலுவலக நகல்கள் எ.ம.சா.ஆ.3 மற்றும் எ.ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், மனுதாரர்கள் தரப்பில் பொதுக் குடும்பச் சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள திருவேங்கடம் தாலுகா, அழகாபுரி கிராமத்தில் உள்ள சர்வே எண்.65/1A1, 65/1A2, 65/1A4 –ல் உள்ள 14.16 ஏக்கர் நிலம், சர்வே எண்.65/1A3A, 65/1A3B–ல் உள்ள 0.44 ஏக்கர்ஸ் நிலம், மற்றும் சர்வே எண்.65/1B–ல் உள்ள 10 ஏக்கர் நிலம் ஆகியவை ஏற்கனவே பிற நபர்களுக்கு கிரையம் கொடுக்கப்பட்டு விட்ட நிலையில் அவற்றை பொது குடும்ப சொத்துக்களாக கருத இயலாது என்றும், அதைப் பொறுத்து பாகப்பிரிவினை கோர இயலாது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்தச் சூழ்நிலையில் மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சில் விரிவாக்கம் செய்யப்பட்டு பிழைதிருத்தப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.07.16 17:50:38 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**
இல்லை

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**
இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**
இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 14.03.2022 | சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தின் மூலம் தாயம்மாள், குருசெல்வி, பழனிச்சாமி மற்றும் ராஜகுரு என்ற நாகலட்சுமி ஆகியோர்கள் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் |

எ.ம.சா.ஆ.2 01.04.2022 தாயம்மாள், குருசெல்வி, பழனிச்சாமி மற்றும் ராஜகுரு என்ற நாகலட்சுமி ஆகியோர்களின் பொது அதிகார முகவர் என்ற நிலையிலிருந்து 4 வது எதிர்மனுதாரர் அவரது மனைவியான 7 வது எதிர்மனுதாரருக்கு பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல்

எ.ம.சா.ஆ.3 19.03.2022 தாயம்மாள், குருசெல்வி, பழனிச்சாமி மற்றும் ராஜகுரு என்ற நாகலட்சுமி ஆகியோர்களின் பொது அதிகார முகவர் என்ற நிலையிலிருந்து 4 வது எதிர்மனுதாரர் அவரது குமாரரான குருபிரசாத் என்பவருக்கு 19.03.2022 ஆம் தேதியன்று பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரைய ஆவணங்களின் சார்பதிவாளர் அலுவலக நகல்

எ.ம.சா.ஆ.4 19.03.2022 தாயம்மாள், குருசெல்வி, பழனிச்சாமி மற்றும் ராஜகுரு என்ற நாகலட்சுமி ஆகியோர்களின் பொது அதிகார முகவர் என்ற நிலையிலிருந்து 4 வது எதிர்மனுதாரர் அவரது குமாரரான குருபிரசாத் என்பவருக்கு 19.03.2022 ஆம் தேதியன்று பிறப்பித்துக் கொடுத்துள்ள கிரைய ஆவணங்களின் சார்பதிவாளர் அலுவலக நகல்

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.07.16 17:50:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி
இடைநிலை மனு எண்.16/2024
அதன்
அசல் வழக்கு எண்.213/2021
உத்தரவு (நேரிய)
நாள்: 16.07.2025